**கவனிக்க.**- 05.10.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II : பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1780 - 2012 ඔක්තෝබර් මස 12 වැනි සිකුරාදා - 2012.10.12

1780 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1287 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, கார்த்திகை மாதம் 12 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, புரட்டாதி 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | தங்காலை | நகுலுகமுவ பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கிருவாபத்துவ தெற்குப் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அம்பாந்தோட்டை |

10-451

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, கார்த்திகை மாதம் 12 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, புரட்டாதி மாதம் 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | கெக்கிராவ | கலகம்பலாத்த பிரிவில் கெக்கிராவ மற்றும் திம்பெட்டுவெவா பகுதியில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |

10-452

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, கார்த்திகை மாதம் 12 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, புரட்டாதி 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | கலேவெல | மாத்தளை வடக்குப் பிரிவில் மேலதிக பதிவாளர் விவாகப் (கண்டிய/பொது) பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மாத்தளை |

10-568

---

## துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு

வணிகக் கப்பல்துறைப் பணிப்பாளர் நாயகம் அலுவலகம்

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சின் வணிகக் கப்பல்துறைப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கான தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பதிவுத்தபாலில் 2012.11.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர், வணிகக் கப்பல்துறைப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம், இல. 43-89, பிரிஸ்டல் கட்டிடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 1" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்ட பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

**உதவி அரசாங்க கப்பல் அளவையாளர் (கப்பல் தளம்)** :

கல்வித் தகைமை.- கப்பல் பிரயாண காவல் காத்தல் அலுவலர் (NWKO) (வரையறையற்ற) சான்றிதழ் பெற்றிருத்தல்.

அனுபவம்.- மொத்த நிறை (GT) 3000 க்கு மேற்பட்ட நிறையுடைய கடற்பிரயாணத்தில் ஈடுபடும் வணிகக் கப்பல் ஒன்றில் காவல் காத்தல் கடமையில் (கப்பல் தளம்) அலுவலர் ஆக குறைந்தது இரண்டு வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

வயதெல்லை.- 21 வயதுக்கு குறையாத, 45 வயதுக்கு மேற்படாத நபர் (தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.)

சம்பள அளவுத்திட்டம்.- ரூ. 16,720-10 x 320 - 11 x 365 - 15 x 450 - ரூ. 30,685 (சம்பளத்துக்கு மேலதிகமாக தொழில் தகைமைக் கொடுப்பனவும்).

சேவையில் நியமிப்பதற்கான நிபந்தனை.- இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள், அனாதைகள் நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப்பட வேண்டும். இந்நியமனம் மூன்று வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படும்.

ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்களூடாக அனுப்ப வேண்டும்.

ஏ. டபிள்யூ. செனவிரட்ன,
வணிகக் கப்பல் பணிப்பாளர் நாயகம்.

வணிகக் கப்பல் பணிப்பாளர் நாயகம் அலுவலகம்,
இல. 43-89, "பிரிஸ்டல் கட்டிடம்",
1 ஆம் மாடி, யோர்க் வீதி,
கொழும்பு.
இணையத்தளம் : www.dgshipping.gov.lk.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு**

வணிகக் கப்பல்துறைப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்

***உதவி அரசாங்க கப்பல் அளவையாளருக்கான (பொறியியல்) அலுவலர்***

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. பிறந்த திகதி :----.

2012.11.09 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் ----, மாதங்கள் ----, நாட்கள் ----.

4. இனம் :
5. கல்வித் தகைமைகள் :----.
6. தொழில் தகைமைகள் :----.
7. தொழில் மற்றும் பயிற்சி தொடர்பான விபரங்கள் :----.
8. தற்போதைய தொழில் :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என்பதை உறுதி செய்கின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது நியமனம் வழங்க முன்னர் உண்மையற்றது என தெரியவந்தால் அதன் காரணமாக நான் இந்தப் பதவிக்கு தகுதியற்றவர் ஆகவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் இந்த தவறு தெரியவந்தால் எந்தவித நட்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10-516

---

**கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்**

இலங்கைக் கணக்காய்வு சேவையின் வகுப்பு II இன் தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிகள் - நேரடி ஆட்சேர்ப்புக்கள்

2008, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 1563/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் 1989, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 588/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 1984, மாச்சு மாதம் 20 ஆந் திகதிய 289/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி 4 (iii) இன் பிரகாரம் இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகரின் 5 பதவிகளுக்காக கீழே பந்தி 4 இல் குறிப்பிடப்பட்ட தொழில்சார் தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், இலக்கம் 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும் :-

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 2012.10.31

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 2012.11.06

விண்ணப்பங்கள் அனுப்புகையில் கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் "இலங்கை கணக்காய்வுச் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நேரடி ஆட்சேர்ப்புக்கள்" தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

**குறிப்பு**.- தபாலில் தொலைந்துபோதல் அல்லது தாமதமடைதல் என்பது தொடர்பான முறைப்பாடுகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. கடைசி நாள்வரை தமது விண்ணப்பங்களைத் தாமதப்படுத்திய விண்ணப்பதாரியே அதனால் ஏற்படும் பாதிப்புக் களுக்குப் பொறுப்பானவராகும்.

2. **சேவையில் இணைத்துக்கொள்ளும் பிரிவுகளும் நிபந்தனை களும்**.- (i) 1989, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 588/5 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை களுக்கும் அந்த சேவை பிரமாணக் குறிப்பிற்கு அதன் பின்னர் செய்யப்படுகின்ற திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை கணக்காய்வுச் சேவையின் வகுப்பு II தரம் II இற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

(ii) இந்தப் பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையது மாகும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புக்கள் செய்ய வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் மூன்று ஆண்டுகள் நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டு இச்சேவைக்கு நியமிக்கப் படுவதுடன் இந்த ஆட்சேர்ப்பிற்கு முன்னர் அரசாங்க சேவையில்/மாகாண சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியத்திற்கு தகைமையுள்ள அடிப்படையில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப் படுகின்ற முதலாவது சந்தர்ப்பத்தில் ஒரு ஆண்டு பதில் கடமை காலத்திற்காக சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். அவ்வாறு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரின் நன்னடத்தைக் காலம்/வேலை பார்க்கும் காலத்தின் இறுதியில் உரிய தகைமைகளைப் பெற்றுக்கொண்டால் அப்பதவியில் நிரந்தரமாக்கப்படும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் "இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க மொழிக் கொள்கையினை அமுல்படுத்துவதற்காக காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் அனைத்து சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவைகளுக்கிணங்க செயற்பட வேண்டும்" என்ற நிபந்தனை.

(v) அவர்களுடைய தகுதிகாண்/பதில் கடமைக் காலத்தின் இறுதியில் பதவியில் நிரந்தரமாக்குதலானது ஏனைய விடயங்களுக்கு மத்தியில் பின்வரும் விடயங்களில் தங்கியுள்ளது :-

(அ) வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது ; மற்றும்

(ஆ) தகுதிகாண் காலம் முடிவடைதற்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் பரீட்சையில் சித்தியடைதல்.

(vi) நன்னடத்தைக் காலத்தின் முடிவில் நிரந்தரமாக்கத் தவறினால் அவர்களுடைய சேவையை இடைநிறுத்தவேண்டி ஏற்படும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு தகைமையுள்ள மாதாந்த திரட்டிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூ. 53,555 ஆகும். தெரிவுசெய்யப்பட்டவர் பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை கணக்காய்வு சேவையில் வகுப்பு II தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு மாதம் ஒன்றிற்கு ரூபா 26,805 சம்பள நிலையில் வைக்கப் படுவார்.

4. **தேவையான தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கட்டாயம் பின்வரும் விடயங்களை உறுதிசெய்ய திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) சிறந்த நன்னடத்தை மற்றும் சிறந்த உடல் ஆரோக்கியம் ;

(ஆ) வம்சாவழியாக அல்லது பதிவால் இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(இ) 2012.10.31 இல் 22 வயதினை அடைந்திருத்தலும் 45 வயதிற்கு மேற்படாதிருத்தலும் (தற்பொழுது அரச/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பவர்கள் தொடர்பாக இந்த வயதெல்லை ஏற்புடையதல்ல).

(ஈ) பின்வரும் நிறுவகங்கள் ஏதாவதொன்றில், இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தது அவற்றின் அங்கத்துவம்பெற்ற நபராக இருத்தல் :-

(i) இலங்கை அல்லது இலண்டன் மற்றும் வேல்ஸ் இன் பட்டய கணக்காளர்கள் நிறுவனம் ;

(ii) ஐக்கிய இராச்சியத்தின் பட்டய கணக்காளர்கள் நிறுவனம் ;

(iii) ஐக்கிய இராச்சியத்தின் சான்றுபடுத்திய பட்டயக் கணக்காளர்கள் சங்கம் அல்லது அதற்குச் சமமான தொழில்சார் நிறுவனம்.

**குறிப்பு**.- ஏதாவது பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போர் விண்ணப்பிக்க முடியாது.

5. **ஆட்சேர்ப்பு முறைமை**.- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களை உள்ளடக்கிய மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவால் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார் மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் புள்ளியிடல் நடைமுறைகளின் பிரகாரம் புள்ளிகளை வழங்கியதன் பின்னர் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் பொதுச்சேவை ஆணைக்குழுவால் நியமனம் வழங்கப்படும்.

6. பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை அல்லது அனைத்தினையும் வேண்டுகையில் அவற்றினை அல்லது அனைத்தையும் விண்ணப்பதாரி சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) தொழில்சார் மற்றும் ஏனைய தகைமை தொடர்பான சான்றிதழ்கள் ;

(இ) நன்நடத்தை தொடர்பாக குறிப்பிடப்படும் அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ;

(ஈ) சிங்களம்/தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சித்தியெய்திய அதிகூடிய பரீட்சை சான்றிதழ்.

**குறிப்பு**.- (i) விண்ணப்பத்துடன் ஆவணங்களை அல்லது ஆவணங்களின் பிரதிகள் எதனையும் இணைத்தலாகாது.

(ii) கோரப்படும் நேரத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பம் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

7. அரச/மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களினால் தங்களின் விண்ணப்பப்படிவங்கள் சுயமாக அவர்களுடைய நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதி விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்கும் முடிவுத் திகதிக்கு முன்னர் நேரடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப முடியும்.

8. விண்ணப்பப்படிவமும் அது தொடர்பான ஏனைய ஆவணங்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கல்லாது திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பலாகாது.

9. வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்க சேவையில் நியமிப்பதற்கான பொது நிபந்தனைகளுக்கு உங்களது கவனம் கோரப்படுகின்றது.

10. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி விண்ணப்பங்களைப் பொறுப்பேற்ற இறுதித் திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் விண்ணப்பதாரிக்கு தெரிவிக்கப்படும். அவ்வாறான அறிவித்தல் கிடைக்காவிடின் அதுபற்றி உடனடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ''கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், இலக்கம் 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும்.

11. மேற்குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளுக்கு உட்படாத ஏதாவது விடயங்கள் இருப்பின் அவை பொதுச்சேவை ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படும்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

எச். ஏ. எஸ். சமரவீர,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்துவை வீதி,
பத்தரமுல்லை.
2012, செத்தெம்பர் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு : II தரம் II இற்கான
கணக்காய்வு அத்தியட்சகர் பதவி - நேரடி ஆட்சேர்ப்பு

இலக்கம் : ☐
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ii) முழுப்பெயர் :----.

2. நிரந்தர விலாசம் :----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. (அ) ஆண்/பெண் :----.

(ஆ) திருமணமானவரா, திருமணமாகாதவரா, விதவையா என்பது :----.

5. (i) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ நாட்கள் : ☐☐

(ii) 2012.10.31 ஆந் திகதியன்று வயது-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6. (i) நீங்கள் இலங்கைப் பிரசையாவது வம்சாவழியினாலா ? அல்லது பதிவின் மூலமா ? :----.

(ii) தேசிய இனம் :
சிங்களம்/தமிழ்/இந்திய தமிழ்/முஸ்லிம்

7. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :

| நிறுவனம் | பெற்றுக்கொள்ளப் பட்ட தகைமை | அத்தகைமை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி |
|---|---|---|
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... |

8. தற்பொழுது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

(அ) பதவி :----.

(ஆ) திணைக்களம்/நிறுவனம் :----.

(இ) நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஈ) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா, இல்லாவிடின் ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது : ----.

(உ) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா என்பது :----.

(ஊ) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் :----.

(எ) தற்பொழுது பெற்றுக்கொள்ளும் வருடாந்த சம்பளம் :----.

9. சித்தியடைந்துள்ள அதிகூடிய பரீட்சை :

சிங்களம்
தமிழ்
ஆங்கிலம்

10. உங்களைப் பற்றிய தகவலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு நபர்களின் பெயர்களையும் விலாசத்தையும் குறிப்பிடுக :

(i) ..........................................................................................
(ii) ..........................................................................................

11. ஏனைய தகவல்கள் இருந்தால் அவை :......................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என நான் உறுதிமொழிகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறிந்துகொள்ளப்பட்டால் நான் தகைமையின்மைக்கு உள்ளாகுவேன் எனவும் நியமிக்கப் பட்டதன் பின்னர் அதுபற்றி தெரிந்துகொள்ளப்பட்டால் எதுவித இழப்பீடும் செலுத்தப்படாது நான் சேவையிலிருந்து நீக்கப் படுவேன் எனவும் நான் அறிந்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

12. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/ செல்வி ............................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியாக அறிந்துள்ளேன் எனவும், 2012 ..................

மாதம் ................................ ஆந் திகதி அவர்/அவள் என் முன்னிலையில் கையொப்பம் இட்டுள்ளார் எனவும் நான் வெளிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

இடம் :----.
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

13. **விண்ணப்பதாரர் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின் அவர் தொடர்பாக நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற ............... எனும் பெயருடைய விண்ணப்பதாரர்/ விண்ணப்பதாரி ......................................... ஆந் திகதியிலிருந்து இந்த அலுவலகத்தில் சேவையாற்றி வருகின்றார் எனவும் அவரின்/அவளின் வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியாக உள்ளது எனவும் விண்ணப்பதாரர்/விண்ணப்பதாரி சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் எனவும், மேலே 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்திலுள்ள ஆவணங்களின் உதவியோடு நான் தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்துள்ளேன் எனவும் அவை சரியானவை எனவும் 2012 ............................ மாதம் ................................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

----,
அரசாங்க/மாகாண அரசாங்க
நிறுவனத் தலைவரின் அல்லது அவரின்
அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.

**இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பின் II தரம் II இற்கான கணக்காய்வு அத்தியட்சகர் பதவிகளுக்காக தொழில்சார் தகைமைகளைக் கொண்ட நபர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது புள்ளியிடல் நடைமுறை**

(அ) தொழில்சார் தகைமை : உச்ச அளவு புள்ளிகள் 25

(i) அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய சமமான பூர்த்திசெய்த தொழில் சார் தகைமைகளுக்காக (ஒரு தொழில்சார் தகைமைக்கு 5 புள்ளிகள்படி) — 15 புள்ளிகள்

(ii) மேலே குறிப்பிடப்பட்ட துறைக்கு மேலதிகமாக ஏனைய துறைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் தகைமைகளுக்காக — 10 புள்ளிகள்

(ஆ) கல்விசார் தகைமைகள் : உச்ச அளவு புள்ளிகள் 20

(i) கலாநிதிப் பட்டம் அல்லது முதுமானிப் பட்டம் (கணக்காய்வு/கணக்கியல்) — 20 புள்ளிகள்

(ii) கலாநிதிப் பட்டம் அல்லது முதுமானிப் பட்டம் (ஏனைய துறைகளிலிருந்து) — 17 புள்ளிகள்

(iii) பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (கணக்காய்வு/கணக்கியல்) — 15 புள்ளிகள்

(iv) பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (ஏனைய துறைகளிலிருந்து) — 10 புள்ளிகள்

(v) பட்டப்படிப்பு :

(i) முதலாம் வகுப்பில் தேர்ச்சி — 10 புள்ளிகள்

(ii) இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் தேர்ச்சி — 08 புள்ளிகள்

(iii) இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவில் தேர்ச்சி — 07 புள்ளிகள்

(vi) சாதாரண சித்தியுடன் பட்டப் படிப்பு — 05 புள்ளிகள்

(இ) கணனி அறிவு : உச்ச அளவு புள்ளிகள் 10

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் — 10 புள்ளிகள்

(ii) ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட டிப்ளோமா — 08 புள்ளிகள்

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட கணனி தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் (06 மாதங்களுக்கு குறையாததும் 01 ஆண்டிற்கு மேற்படாததுமான கற்கைநெறி) — 06 புள்ளிகள்

(iv) ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட கணனி தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் (06 மாதங்களுக்கு மேற்படாததும் 01 மாதத்திற்கு குறையாததுமான கற்கைநெறி) — 04 புள்ளிகள்

(v) ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட கணனி தொழில்நுட்பம் தொடர்பான

சான்றிதழ் (02 வாரங்களுக்கு குறையாததும் 01 மாதத்திற்கு மேற்படாததுமான கற்கைநெறி) (பெற்றுக்கொள்ளப்பட்ட உயர்ந்த பட்ச தகைமைகளுக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) — 06 புள்ளிகள்

**குறிப்பு**.- விண்ணப்பதாரரினால் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஒரு கலாநிதிப் பட்டம் அல்லது முதுமானிப் பட்டம் அல்லது பட்டப்படிப்பு அல்லது பட்டப் பின்படிப்பு கற்கைநெறி மேலே (ஆ) (iv), (ஆ) V, (ஆ) VI என்பவற்றில் குறிப்பிடப்பட்டவை கல்விசார் தகைமை களாகவும் (இ) i, (இ) ii இல் குறிப்பிடப்பட்டவை கணனி அறிவு தொடர்பான தகைமைகளாகவும் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) *அனுபவம் :* — *உச்ச அளவு புள்ளிகள் 20*

(விண்ணப்பதாரரினால் அடிப் படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் எதிர்பார்க் கப்பட்ட 02 ஆண்டுகள் சேவைக் காலத்தின் பின்னரும் சம்பந்தப் பட்ட துறையின் சேவை தொடர் பாக அடைந்துகொள்ளப்படும் ஒவ்வொரு ஆண்டிற்கும் 02 புள்ளி கள்படி)

(உ) *விசேட திறன்கள் :* — *உச்ச அளவு புள்ளிகள் 10*

(i) வளவாளர்களாகச் செயற் பட்டிருத்தல் — 03 புள்ளிகள்

(ii) வெளியிடப்பட்ட செயற்திட்ட அறிக்கை, ஆராய்ச்சி அறிக்கை மற்றும் தொழில்சார் அல்லது கல்விசார் புத்தகங்கள் — 05 புள்ளிகள்

(iii) நேர்முகப் பரீட்சைக் குழு ஏற்றுக் கொள்கின்ற ஏனைய திறன்கள் — 02 புள்ளிகள்

(ஊ) *நேர்முகப் பரீட்சையின்போது காட்டுகின்ற திறமைகள் :* — *உச்ச அளவு புள்ளிகள் 15*

நேர்முகப் பரீட்சையின்போது காட்டு கின்ற தொடர்பாடல் மற்றும் முன் வைத்தல் திறமைகளுக்காக

மொத்தம் — உச்ச அளவு புள்ளிகள் 100

*10-598*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.